بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/09/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தைப் பற்றிக் கூறப்பட்டு வருகிறது. இன்று அதனைத் தொடர்ந்து ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டில் நிகழ்ந்த பைத்துல் முகத்தஸ் வெற்றி பற்றிய குறிப்பு எடுத்துரைக்கப்படும். கிறிஸ்தவர்கள், முற்றுகையினால் நெருக்கடிக்கு ஆளாகி சமாதானத்திற்கு முன் வந்தார்கள். கூடவே ஒரு நிபந்தனையும் வைத்தனர். அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சமாதான உடன்படிக்கையை செய்து வைப்பதற்காக சுயமே பைத்துல் முகத்தஸுக்கு வர வேண்டும் என்பதேயாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சஹாபிகளிடம் ஆலோசனை கேட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: கிறிஸ்தவர்கள் பயந்து விட்டார்கள்; துவண்டும் உள்ளனர். தாங்கள் அவர்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டால் அவர்களுக்கு அது இன்னும் இழிவுக்கு காரணமாக ஆகி விடும். ஆனால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஏலியா செல்லுமாறு கூறினார்கள். ஆலோசனைக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களையோ அல்லது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையோ மதீனாவில் அமீராக நியமனம் செய்து விட்டு பைத்துல் முகத்தஸுக்குப் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இப்பயணம் ஒரு சாதாரண பயணமாக இருக்கவில்லை. இப்பயணத்தின் நோக்கம் இஸ்லாமிய ஆளுமையையும் அதிகாரத்தையும் ஏற்படுத்துவதாக இருந்தது. ஆனால் அவ்வாறிருந்தபோதிலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் பெரும் படை ஒன்றும் செல்லவில்லை. மாறாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் எளிமையாக சில சஹாபிகளுடன் புறப்பட்டார்கள் அல்லது தம்முடைய ஒரே ஒரு பணியாளருடன் புறப்பட்டார்கள். அவ்வாறிருந்தும் கூட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வருகை குறித்து எங்கெல்லாம் செய்தி சென்றடைந்ததோ அங்கெல்லாம் பூமி நடுங்கியது.

முஹம்மது ஹுஸைன் ஹேக்கல் அவர்களின் கூற்றுக்கிணங்க, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒப்பந்தத்தை எழுதுவதற்காக மட்டும் செல்லவில்லை. மாறாக, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் மேற்கொண்டு உதவி கோரியபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பொறுமை முடிவுக்கு வந்தது. ஆகவே அன்னார் சுயமே, சிரியா மற்றும் ஜோர்டான் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதியான ஜாபியாவை நோக்கி புறப்பட்டார்கள். அக்கால கட்டத்தில் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களும் சிரியாவை வெற்றி கொண்டு விட்டனர். பைத்துல் முகத்தஸை வெற்றி கொள்வதற்காகப் பயனுள்ள வழியைக் கண்டறிய ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்விருவரையும் ஜாபியா வரவழைத்தார்கள்.

எதிரிகளின் தலைவர்களுக்கு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களும் ஜாபியா சென்றடையும் தகவல் கிடைத்ததும், இப்போது பைத்துல் முகத்தஸின் பகுதிகள் இனி நீண்ட காலம் அவர்களின் கையில் இருக்க முடியாது என உணர்ந்து கொண்டனர். எனவே அவர்களின் ஒரு தலைவர் கொஞ்சம் படையுடன்

எகிப்துக்கு ஓடி விட்டார். ஆனால் சஃப்ரோநியோஸ் (**Sophronius**) என்பவர் சமாதான பேச்சுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வர வேண்டும் என நிபந்தனை விதித்திருந்தார். பயணத்தின் போது ஒவ்வொரு நாளும் காலை தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம் தோழர்களிடத்தில் இறை அருள் நிறைவாக கிடைப்பதற்காக துஆ செய்யும்படி வலியுறுத்தி வந்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி), ஹஸ்ரத் யஸீது பின் அபீ ஸுஃப்யான் (ரலி) போன்றோர் ஜாபியாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை வரவேற்றார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அந்த அதிகாரிகளிடம் அரேபியர்களின் எளிமை எஞ்சியில்லாததைக் கண்டு குதிரையை விட்டு கீழிறங்கி அவர்களின் மீது பொடிக் கற்களை வீசினார்கள். அதற்கு அவர்கள், இந்த விலை மதிப்புள்ள மேலாடையின் கீழ் ஆயுதங்கள் உள்ளன; போராளிகளின் தன்மையை நாங்கள் இழக்கவில்லை என்று கூறினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இம்மக்களுக்குக் காட்டுவதற்காக வெளிப்படையான பகட்டை மேற்கொள்கிறீர்கள் என்றால் சரி!

ஹஸ்ரத் யஸீது பின் அபீ ஸுஃப்யான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் விலையுயர்ந்த ஆடையையும் சிறந்த சவாரியையும் பயன்படுத்துமாறு வேண்டுகோள் வைத்தார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், யஸீதே! அல்லாஹ்வின் மீதாணையாக! நான் எனது இரு தோழர்களை எந்த தோற்றத்திலும் எந்த நிலையிலும் அனுப்பி வைத்தேனோ அந்த தோற்றத்தையும் அந்த நிலையையும் விட்டு விடமாட்டேன் என்று கூறினார்கள். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருடன் எந்நிலையில் நான் இருந்தேனோ அதே நிலையிலேயே இருப்பேன். மக்களுக்காக நான் அழகையும், அலங்காரத்தையும் மேற்கொள்ள மாட்டேன். இவ்வாறு செய்தால் அது என்னை எனது இறைவனிடத்தில் குற்றவாளியாக ஆக்கி விடும் என நான் அஞ்சுகிறேன். மக்களுக்கு முன் எனது விவகாரம் மேன்மையானதாக ஆகி அல்லாஹ்வுக்கு முன் மிகச் சிறியதாக ஆகி விடக்கூடாது என நான் விரும்புகிறேன் என்றார்கள்.

ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வுலகை விட்டு செல்லும்வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோரின் காலத்தில் எந்நிலையில் இருந்தார்களோ அதே நிலையில் நிலைத்திருந்தார்கள்.

சில வரலாற்றாசிரியர்களைப் பொறுத்தவரை முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஜாபியா என்ற இடத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும், சில அறிவிப்புகளின்படி ஏலியா என்ற இடத்தில் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த ஒப்பந்தத்தில் ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி), ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் முஆவியா பின் அபீ ஸுஃப்யான் (ரலி) ஆகியோரின் சாட்சியங்கள் பதிக்கப்பட்டன. *இதன் பிறகு ஹுஸுர் அவர்கள் தப்ரீ வரலாற்று நூலில் எழுதப்பட்ட சமாதான ஒப்பந்தத்தையும் எடுத்துரைத்தார்கள்.*

இப்னே கல்தூன் எனும் வரலாற்று நூலின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்திலிருந்து சில விஷயங்கள் நிரூபணமாகின்றன. உதாரணமாக, இஸ்லாம் வாளின் பலவந்தத்தால் பரப்பப்படவில்லை. முஸ்லிம்களின் (ஆட்சிக்) காலத்தில் பிற மார்க்கங்களுக்கு மார்க்க சுதந்திரம் கிடைத்திருந்தது. பிற சமுதாயங்களிடமிருந்து வலுக்கட்டாயமாக வரி வசூலிக்கப்படவில்லை. இந்த சமாதான (ஒப்பந்த) செய்தி பரவியபோது, ரம்லா வாசிகளும் பாலஸ்தீன மக்களும் லுத் நகரவாசிகளும் இது போன்ற ஒப்பந்தம் வேண்டி கோரிக்கை வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பாலஸ்தீனத்தை இரு பாதியாக பங்கிட்டு அல்கமா பின் ஹக்கீம் அவர்களுக்கு ரம்லாவின் மத்திய ஆட்சியதிகாரத்தை வழங்கினார்கள். அவ்வாறே, அல்கமா பின் முஜஸ்ஸிர் அவர்களை ஏலியா நகரத்தின் மீது ஆட்சியதிகாரியாக நியமித்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் எளிய உடையில் பைத்துல் முகத்தஸுக்கு சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களும் படைத்தளபதிகளும் அன்னாரை வரவேற்றனர். கிறிஸ்தவ பாதிரிமார்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் நகரத்தின் சாவிகளை ஒப்படைத்தனர்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: கிறிஸ்தவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை எளிய உடையில் கண்டபோது (மதிப்பச்சத்தால்) நகரத்தின் சாவிகளை எறிந்து விட்டார்கள். அத்துடன், இந்த படைத்தளபதியை நாம் எதிர்கொள்ள முடியாது என்று கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதலில் அக்ஸா பள்ளிவாசலுக்கு சென்றார்கள். பிறகு கிறிஸ்தவர்களின் தேவாலயத்தை சுற்றிப் பார்த்தார்கள். அப்போது தொழுகைக்கான நேரம் வந்த போது, கிறிஸ்தவர்கள் தேவாலயத்திலேயே தொழுவதற்கு அனுமதி வழங்கினர். ஆயினும் அன்னார், வருங்கால சந்ததியினர் இச்செயலை ஆதாரமாகக் கருதிக் கொண்டு கிறிஸ்தவ வணக்கஸ்தலங்களை கைப்பற்றி விடக் கூடாது என்றெண்ணியவாறு வெளியே வந்து தொழுதார்கள்.

ஏலியாவில் தங்கியிருக்கும் போது ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களைத்தவிர அனைத்து முஸ்லிம் படைத்தளபதிகளும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு விருந்தோம்பல் செய்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் கேட்ட போது, ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அமீருல் முஃமினீன் அவர்களே! நான் உங்களுக்கு விருந்துக்கு அழைப்பு கொடுத்தால், தாங்கள் கண்களை கட்டுப்படுத்த இயலாது என்று நான் அஞ்சுகிறேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களின் கூடாரத்திற்கு சென்றபோது, அங்கு குதிரையின் சேனத்தையும் அதன் விரிப்பையும் தவிர வேறு ஒன்றும் இருக்கவில்லை. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் இந்த இரு உபகரணங்களையுமே தம் படுக்கை விரிப்பாக பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். ஓர் ஓரத்தில் காய்ந்த ரொட்டி இருந்தது. அத்துடன் தண்ணீரையும் சேர்த்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முன் அன்னார் எடுத்து வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த காட்சியைக் கண்டபோது அன்னார் அழுதார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களை தம்மோடு அணைத்துக் கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், தாங்கள் என்னுடைய இடத்திற்கு வந்தால் கண்களை கட்டுப்படுத்த இயலாது என்று நான் தங்களிடம் முன்பே சொல்லவில்லையா என்ன? என்று வினவினார்கள். அதன் பிறகு வெளியே வந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களிடையே (உரையாற்ற) நின்றார்கள். புகழுக்குரியவனாகிய அல்லாஹ்வைப் புகழ்ந்து துதி பாடினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதிய பிறகு கூறினார்கள்: இஸ்லாமியர்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்களுடன் செய்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளான். எதிரிகளுக்கெதிராக அவன் உங்களுக்கு உதவி செய்தான். அவன் உங்களை இந்த நாடுகளுக்கு வாரிசாக ஆக்கி விட்டான். பூமியில் உங்களுக்கு நிம்மதியை வழங்கியுள்ளான். ஆகவே நீங்கள் உங்களது இறைவனின் அருள்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். நீங்கள் கட்டுப்படாத செயல்களை விட்டு விலகி இருக்க வேண்டும். ஏனென்றால் கட்டுப்படாமை என்பது அருள்களுக்கு நன்றி கேடு காட்டுவதாகும். அல்லாஹ் ஒரு சமுதாயத்தின் மீது அருள் செய்து அவர்கள் நன்றி கேடு காட்டி பிறகு விரைவில் தவ்பா செய்யாமல் இருந்தது மிகக் குறைவே. அவ்வாறு இருந்தால் நிச்சயமாக அவர்களின் கண்ணியம் அழிக்கப்பட்டிருக்கும்.

ஒரு முறை ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், அதிகாரிகள் மிக நல்ல உணவுகளை உண்கிறார்கள் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் முறையிட்டார்கள். சாதாரண முஸ்லிம்களுக்கு எளிய உணவுகள் கூட கிடைப்பதில்லை என்று கூறினார்கள். இதைக் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆய்வு செய்த போது, ஹிஜாஸை விட அங்கு பொருள்களின் விலை மிகக் குறைவு என்று தெரிய வந்தது. ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதிகாரிகளை கட்டாயப்படுத்துவதற்கு பதிலாக ஏழை முஸ்லிம்களின் அத்தியாவசிய பொருள்களின் பட்ஜெட்டை உருவாக்கினார்கள். பைத்துல் மாலிலிருந்து அப்பொருட்கள் வழங்கப்படும் என நம்பிக்கையளித்தார்கள்.

ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் காரணமாக ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை பாங்கு கொடுக்குமாறு கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு கொடுத்த போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும்

அனைத்து சஹாபிகளுக்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலம் நினைவுக்கு வந்தது. அவர்கள் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

பைத்துல் முகத்தஸிலிருந்து திரும்பிச் செல்லும்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முழு நாட்டிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள். அன்னார் மதீனா சென்றடைந்த போது முஸ்லிம்கள் அன்னாரை மிக உற்சாகமாக வரவேற்றார்கள். அன்னார் நபவீ பள்ளிவாசலுக்கு சென்று இரு ரக்அத்துகள் தொழுதார்கள். அதன் பிறகு மக்களிடம் உரையாற்றினார்கள்.

ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் ரோமானியர்கள் தம் சார்பாக இறுதி முயற்சி செய்தார்கள். யஸ்தகிர்து, இரே நழுவிச் சென்ற பிறகு ஜஸீரா வாசிகள் அவன் மீது முற்றிலும் அவநம்பிக்கை கொண்டு விட்டனர். ஆகவே அவர்கள் ஹெராக்ளியசிடம், கடல் மார்க்கமாக படையெடுப்பு செய்தால் அவனுக்கு உதவி செய்வதாக எழுதினார்கள். ஹெராக்ளியஸ் இந்த விவகாரத்தைக் குறித்து சிந்தித்த பிறகு, கப்பல்களை அலெக்ஸாந்திரியா நகரத்திலிருந்து அந்தாக்கியா சென்றடையுமாறு கட்டளையிட்டான். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் இந்த படையெடுப்பைக் குறித்து அறிந்தபோது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை ஆலோசனைக்காக அழைத்தார்கள். ஹெராக்ளியஸின் கப்பல்கள் அந்தாக்கியா வந்தடைந்தபோது நகரத்தின் கதவுகள் அவர்களுக்காக திறந்தன. சிரியாவின் வடக்குப் பகுதியைச் சார்ந்தவர்கள் கிளர்ச்சி செய்யும் முனைப்பில் இருப்பதைக் கண்ட ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், தாம் ஹோம்ஸ் நகரத்தில் முற்றுகையிடப்பட்டதாக உணர்ந்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் தற்போதைய நிலை குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தெரிவித்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடக்கம் முதலேயே இந்த அபாயத்தைக் கருத்தில் கொண்டவாறு தொலைநோக்குப் பார்வையுடன் கூஃபா மற்றும் பஸ்ரா ஆகிய இடங்களில் இராணுவ முகாம்களை அமைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களின் கடிதம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது, முஸ்லிம்களின் இந்த மாபெரும் படைத்தளபதி பெரும் அபாயத்தில் சுற்றி வளைக்கப்பட்டதாக அன்னார் உணர்ந்தார்கள். ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அதில், கஃகாஃ பின் அம்ர் அவர்களை ஹோம்ஸ் நகரத்திற்கு அனுப்புமாறு எழுதியிருந்தார்கள். அதேபோன்று, ரோமானியர்களுடன் போர் நடை பெறுவதற்கு முன், ஹெராக்ளியஸுக்கு உதவி செய்வதற்காக எந்தெந்த பகுதிகளில் படைகள் ஒன்று சேர்ந்துள்ளனவோ அங்கு உங்களின் படைப் பிரிவுகளை அனுப்பி வையுங்கள் என்று இதர அனைத்து படைத்தளபதிகளுக்கும் எழுதினார்கள். இந்த ஞானமிக்க நடவடிக்கையின் விளைவால், ஹெராக்ளியஸுக்கு உதவி செய்வதற்காக வந்த படைகள் தமது இடங்களுக்கு திரும்பி விட்டன. ஜஸீராவிலிருந்து வந்த படைகள் திரும்பி விட்டன என்ற செய்தி கிடைத்தபோது, ரோமானியர்களுடன் போரிட (திறந்த) வெளியில் இறங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் முஸ்லிம் படையின்முன் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் சொற்பொழிவை ஆற்றினார்கள். அப்போரில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியா செல்லும் வழியில் ஜாபியா என்ற இடத்திற்கு வந்தடைந்துதான் இருப்பார்கள்; வெற்றிச் செய்தி வந்தடைந்தது. ஆகவே அன்னார் மதீனா திரும்பிச் சென்று விட்டார்கள். போர்ச் செல்வத்தில் கூஃபா வாசிகளையும் இணைத்துக் கொள்ளுமாறு அன்னார் கட்டளையிட்டார்கள். இந்த வெற்றிக்கு 3 வருடங்களுக்குப் பிறகு ஹெராக்ளியஸ் மரணமடைந்து விட்டான்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குறிப்பு தொடரும் என்று கூறிய பிறகு, ஹுஸூர் அவர்கள், ஓய்வு பெற்ற ஸ்டேஷன் மாஸ்டரும் தற்போது கனடாவில் வசித்து வந்த மதிப்பிற்குரிய சவுத்ரி சயீது அஹ்மது லக்கன் சாஹிப் அவர்களின் நற்குறிப்பையும், பங்களாதேஷின் முன்னாள் துணை நேஷனல் அமீராகிய மதிப்பிற்குரிய ஷஹாபுத்தீன் சாஹிப் அவர்களின் நற்குறிப்பையும், மதிப்பிற்குரிய ராவ்ல் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் நற்குறிப்பையும் எடுத்துரைத்து இவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

*ஹுஸூர் அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவ மன்னிப்பு மற்றும் உயர் அந்தஸ்திற்காக துஆ செய்தார்கள்.*

**(தமிழாக்கம்: முஅல்லிம் M. நிஜாமுத்தீன்)**